**மட்டக்களப்பு மாநகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 13 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட 07 திகதி மா நகர சபையின் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மட்டக்களப்பு மாநகர சபை இன் 2014 திசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2003 ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா.6,860,650 பெறுமதியான தண்ணீர் பவுசர் இயந்திரத்தை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக சொத்தாகக் கொண்டுவரப்படுகின்றது.

(ஆ) மாநகர சபையின் நூல் நிலையத்திலுள்ள புத்தகங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்த போதிலும் வாசகர்களால் மீள ஒப்படைக்கப்படாத 262 புத்தகங்களின் பெறுமதியான ரூபா.38,686 கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்காததனால் புத்தகங்களின் பெறுமதி அத்தொகையால் ஐந்தொகையில் குறைத்து கணக்கிட்டுள்ளது.

(இ) 2004 ஆம் ஆண்டில் ஒரு அரசசார்பற்ற நிறுவனத்திலிருந்து நன்கொடையாக பெறப்பட்ட உடற்பயிற்சி உபகரணங்கள் பெறுமதி மதிக்கப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் 1995 ஆம் ஆண்டிலிருந்து ஊழியர்களிடமிருந்து அறவிட்ட ஒய்வூதியத்திட்டத்திற்கான பங்களிப்பு பணத்தை மாதாந்தம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததால் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா.28,454,977 பங்களிப்பு பணம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது. இத்தொகை நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்டுள்ளது.

### 1.3.2 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையினால் படவரைஞர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சேவைகளுக்காக அவர்களுக்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு இறுதி வரை கொடுக்கப்பட வேண்டிய ரூபா.422,555 தொகையை கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது வைப்புக் கணக்கில் வைப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற 11 ஊழியர்களின் பதவியினர் கடன் நிலுவை ரூபா.465,011 தொகையை இளைப்பாற்று பணிக்கொடையிலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்டு வருகின்றது.

(இ) மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் 1999 நவம்பர் 24 திகதிய பிஎல்/7/3/4/49 இலக்க கடிதத்தின் பிரகாரம் படமாளிகைச் சொந்தக்காரர்களினால் 1999 திசெம்பர் 01 தொடக்கம் 2007 திசெம்பர் 31 வரை செலுத்த வேண்டிய களியாட்ட வரி உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். இதற்கிணங்க உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பெறவேண்டிய ரூபா.744,020 தொகையான களியாட்டவரி இன்றுவரை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி சபையின் மீளாய்வாண்டின் நிதிப்பெறுபேறானது ரூபா.29,634,718 தொகையான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானத்தை விளைவித்திருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா.20,723,801 ஆக விளைந்திருந்தது. இது நிதிப்பெறுபேற்றில் ரூபா.8,910,917 முன்னேற்றத்தை காட்டுகின்றது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மாநகர சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமானவிடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| விளம்பர கட்டணம் | 3,814 | 3,112 | 1,371 |
| வியாபார கட்டணம் | 8,912 | 6,831 | 3,359 |
| கொல்களக் கட்டணம் | 33 | 27 | 23 |
| குத்தகை | 6,872 | 6,872 | 6,776 |
| களியாட்ட வரி | 142 | 89 | 797 |
| விடுதி வாடகை | 185 | 185 | 326 |
| வெளிக்கடை வாடகை | 2,222 | 1,888 | 1,088 |
| சந்தைக்கடை வாடகை | 3,168 | 2,954 | 752 |
| வாடி வீட்டு வாடகை | 468 | - | 1,030 |

### 2.2.2 ஆதனவரிகள்

மாநகர சபை அதிகார எல்லைக்கு உட்பட்ட குடியிருப்பாளர்களிடமிருந்து 2008 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு இறுதி வரை ரூபா.19,509,383 தொகையான ஆதனவரிகள் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அவை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வீத வரிகள்

1983 ஆம் ஆண்டில் இருந்து மீளாய்வாண்டு இறுதிவரை வியாபார ஸ்தலங்களிலிருந்து வீத வரி நிலுவையாக ரூபா.2,296,174 அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அவற்றை அறவிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 ஏனைய வருமானங்கள்

மாநகர சபைக்குச் சொந்தமான பொது இடங்களை குத்தகைக்கு விடும் போது சொத்துப் பிணையோ அல்லது வங்கிப் பிணையோ பெறப்படாது அல்லது முழுத் தொகையும் ஆரம்பத்திலேயே பெற்றுக் கொள்ளாது குத்தகைக்கு வழங்கியதனால் 1990 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு இறுதி வரை 61 நபர்களிடம்

இருந்து அறவிட வேண்டிய குத்தகை நிலுவை ரூபா.6,776,204 அறவிடப்படாது காணப்படுகிறது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

ஓட்ட வாசிப்புமானி செயல் இழந்த நிலையில் காணப்படும் 8 வாகனங்கள் திருத்தம் செய்யப்படாமல் ஆறு வருடங்களுக்கு மேலாக உபயோகிக்கப்படுகின்றன. இதை திருத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்.

சபைக்குச் சொந்தமான திருத்தம் செய்து பயன்படுத்தக் கூடிய நிலையிலுள்ள 04 உழவு இயந்திரங்கள் 02 பவுசர்கள் என்பன திருத்தம் செய்யப்படாது ஆறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படாதுள்ளது.

### 3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

மாநகர சபைக்குச் சொந்தமான 5 காணிகள் கேள்வி நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படாமல் மாநகர சபைகள் கட்டளைச் சட்ட விதி அத்தியாயம் 252 பகுதி IV இலக்கம் 35 ற்கு முரணாக வியாபார நோக்கத்திற்காக மிகக் குறைந்த மாதாந்த வாடகைக்கு 5 வருடம் தொடக்கம் 30 வருடங்கள் வரையான நீண்டகால குத்தகைக்கு முதல்வரால் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்தன. விபரம் கீழே தரப்படுகிறது.

| காணியின் பெயர் | காணியின் பரப்பளவு | காணியின் பெறுமதி ரூபா | குத்தகை காலம் | மாதாந்த குத்தகை ரூபா |
|---|---|---|---|---|
| சவப்பெட்டிக்கடை - பிள்ளையாரடி | 36.69 பேர்ச் | 2 மில்லியன் | 30 வருடம் | 4000 |
| ஆட்டோ - கராச் பிள்ளையாரடி | 23.72 பேர்ச் | 2 மில்லியன் | 30 வருடம் | 2500 |
| பொதுக் கிணறு - முனைவீதி | 155.25சதுரஅடி | 3 மில்லியன் | 30 வருடம் | 1500 |
| வாவிக் கரை கட்டடம் | 16.75 பேர்ச் | 4 மில்லியன் | 05 வருடம் | 1000 |
| தர்சா எம்போரியம் | 568.75சதுரஅடி | 4 மில்லியன் | வருடாந்தம் | 5000 |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக்கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 12% தொடக்கம் 106% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டுள்ளமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாடுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை தெளிவாக அவதானிக்கப்பட்டது

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழ் வரும் கட்டுப்பாட்டுப் விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) வருமான சேகரிப்பு.
(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு.
(இ) நிலையான சொத்துக்கள் பராமரிப்பு